# முதன்மை மாவட்ட நீதிமன்றம், பெரம்பலூர்

## O.S.No.2/2015

DW1– ஜீனா நாள் : 05.04.2025

**வாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

2014 லிருந்து தான் நகராட்சிக்கு செலுத்திய வரி ரசீதுகள் தாக்கல் செய்துள்ளேன். 2014–க்கு முன்பாக என் அம்மா நகராட்சிக்கு வரி செலுத்தினார். 2014 க்கு முன்பாக கடைகள் என் அம்மா பெயரில் இருந்தது என்றால் சரிதான். 1 முதல் 4 இனச்சொத்துகளில் தான் கடைகள் இருந்தது என்றால் சரிதான். பி.வா.சா.ஆ–7 2014 ல் தான் ஏற்பட்டது என்றால் சரிதான். 7 கடைகள் தான் என் அம்மா பெயரில் இருந்தது. 7 கடைகள் என் தந்தை கட்டிவந்தார். மற்ற கடைகள் எல்லாம் நான் தான் கட்டினேன். எல்லா கடைகளும் என் அப்பா காலத்தில் என் அப்பாவால் கட்டப்பட்டது என்றால் சரியல்ல. பி.வா.சா.ஆ.5, 6, 7 க்கு முந்தைய காலத்தில் வரிகள், மின்இணைப்பு, அனைத்தும் என் அப்பா பெயரில் இருந்தது என்றால் சரியல்ல. எனது தாயார் பெயரில் ஏற்பட்ட ரசீதுகள் என்னிடம் உள்ளதா என்று தெரியவில்லை. 2014ல் நான் பாக வழக்கு தாக்கல் செய்த பின்பு தான் வரி ரசீதுகள் என் பெயரில் மாற்றினேன் என்றால் சரியல்ல. பாக வழக்கை நான் 2014 ல் தான் போட்டேன். அந்த வழக்கில் என் அம்மாவும், சகோதரர்களும் ஏற்படுத்தி கொண்ட பாகம் செல்லாது என்று நான் சொல்லவில்லை எனக்கு பாகம் வேண்டும் என்று தான் கேட்டேன். நான் கடன் வாங்கி கடைகள் கட்டினேன் என்பதற்கு ஆவணங்கள் தாக்கல் செய்தேனா என்று நினைவில்லை. மேற்படி கடைகளில் வாடகை வந்தது. என் அப்பா கட்டிய கடைகளில் இருந்து கிடைத்த வருமானத்தை வைத்து தான் நான் கடைகள் கட்டினேன் என்றால் சரியல்ல. நான் தனிப்பட்ட முறையில் என் வருமானத்தை வைத்து கடைகள் எதுவும் கட்டவில்லை என்றால் சரியல்ல. பொதுவருமானத்தை வைத்து தான் நான் சொத்துக்களை அபிவிருத்தி செய்தேன் என்றால் சரியல்ல. தாவா சொத்துகளில் உள்ள ஒரு கடையில் தான் 6ம் பிரதிவாதி அலுவலகம் வைத்து வழக்கறிஞர் தொழில் செய்து

வந்தார் என்றால் என் அனுமதியின் பேரில் செய்தார். நான் அவரிடம் வாடகை வாங்கவில்லை. 5ம் பிரதிவாதி வெங்கடேசனின் மகன் எனது வீட்டில் வசித்து வருகிறார். அவரை நான் தத்து எடுத்து கொள்ளவில்லை. அவரது தாயார் இறந்துவிட்டதால் என்னுடன் வந்து வசிக்கிறார். வெங்கடசேன் பங்குரியர் என்பதால் அவருக்குள்ள உரிமையில் தான் அவரதுமகன் என்னுடன் வசிக்கிறார் என்றால் சரியல்ல. தாவா சொத்துக்கள் அனைத்தும் வாதி பிரதிவாதிகளின் கூட்டு அனுபவத்தில் தான் இப்போது வரை உள்ளது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் எனக்கு தனிப்பட்டு முறையில் அனுபவம் எதுவும் இல்லை என்றால் சரியல்ல. 30 வருடமாக எதிரிடையாக எனக்கு அனுபவம் இல்லை என்றால் சரியல்ல. அசல் வழக்கு எண்.30/2022 ல் நான் காட்டியுள்ள சொத்துக்கள் அசல் வழக்கு எண்.2/2015ல் உள்ள 1 முதல் 4 இனச்சொத்துக்கள் என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.30/2022 ல் உள்ள சொத்துக்களில் எனக்கு தனிப்பட்ட அனுபவம் இல்லை என்றால் சரியல்ல. அந்த சொத்துக்களிலும் வாதி பிரதிவாதிகள் கூட்டு உரிமையாளர்கள் என்றால் சரியல்ல. எனவே அசல் வழக்கு எண்.30/2022 எனக்கு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரம் கிடைக்கக்கூடியதல்ல என்றால் சரியல்ல. நான் அந்த வழக்கில் குறிப்பிட்டுள்ள தானசெட்டில்மெண்ட் பத்திரங்கள் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. எனது சித்தி மருத்துவர் சண்முகபிரியா தான் எங்களை வளர்த்தார். என்னிடம் காண்பிக்கப்படும் கையெழுத்து எனது சித்தி சண்முகபிரியா கையெழுத்து தான். 07.07.2014 அன்று எனது சித்தி சண்முகபிரியா எனக்கும், மற்ற அரசு அலுவலர்களுக்கும் ஒரு நோட்டீஸ் அனுப்பினார். அந்த கடிதம் தான் என்னிடம் காட்டப்படுவது வா.சா.ஆ.6. என் அம்மா நினைவில்லாமல் இருந்தபோது நானும், என் கணவரும் சார்பதிவாளரை வீட்டிற்கு அழைத்து எனது தாயாரிடம் பத்திரங்களில் கையெழுத்து வாங்கியதாக எழுதியுள்ளார் என்றால் சரிதான். ஆனால் அது தவறு. மேலும் அவர் தன்னிடம் சாட்சி கையெழுத்து வாங்கிய போது ஏமாற்றி

வாங்கியதாக சொல்லியிருந்தால் அது தவறு. என்னிடம் அவர் மற்றவர்களை ஏமாற்ற வேண்டாம் என்று சண்டை போட்டதாகவும் அதனால் அவரை நான் வீட்டை விட்டு அனுப்பிவிட்டதாகவும் சொல்லியிருந்தால் சரியல்ல. தான பத்திரங்களை ரத்து செய்துவிட்டு அனைவரும் சமமாக பாகம் பிரித்துக்கொள்ளுங்கள் என்று அந்த கடிதத்தில் சொல்லியுள்ளார் என்றால் சரியல்ல. எனது சித்தியை கடைசி காலத்தில் நாங்கள் கவனிக்கவில்லை என்று சொன்னால் சரியல்ல. அவர் தன்னுடைய நகை , பணத்தை பிடுங்கி கொண்டதாக காவல்நிலையத்தில் புகார் கொடுத்தார் என்றால் சரிதான். அதன் பேரில் என் மீது முதல் தகவல்அறிக்கை பதிவு செய்தார் என்றால் சரிதான். அது விஷயமாக செய்தித்தாளிலும் செய்தி வெளியானது என்றால் சரிதான். அந்த செய்தித்தாளின் நகல் தான் என்னிடம் காட்டப்படுவது அது வா.சா.ஆ.7ஆகும். தாவா சொத்துக்கள் அனைத்தும் கூட்டுகுடும்ப சொத்துக்கள் என்றும் நான் கூட்டுபங்குதாரர் என்ற முறையில் தான் அனுபவித்து வருகிறேன் என்றால் சரியல்ல. எல்லா கடைகளும் என் தாயார் சொத்தில் மட்டும்இல்லை. எல்லா சொத்துக்களிலும்சேர்ந்து தான் உள்ளது. எனக்கு என் அப்பா அம்மா எழுதிகொடுத்த செட்டில்மெண்ட் பத்திரத்தின் அடிப்படையில் தான் பெயர் மாற்றம் செய்து கொண்டேன். என் கணவர் ராமராஜ் நீதிமன்றத்திற்கு வந்துள்ளார். அவரை கேட்டுதான் எல்லா விஷயங்களும் செய்வேன். நான் 1997ல் அவரை திருமணம் செய்தேன். அவரை திருமணம் செய்ததற்கான ஆதாரங்களை வைத்துள்ளேன். வாதி ராமராஜ் என் கணவர் அல்ல என்று சொல்வதற்கு மறுப்பு தெரிவித்து எதிர்வழக்குரை தாக்கல் செய்யவில்லை. 2014க்கு முன்பாக திருச்சி மாநகர தலைவராக ராமராஜ் இருந்தார். அவரின் செல்வாக்கை அடிப்படையில் தான் நான் வரிவிதிப்பு மாற்றம் செய்துகொண்டேன் என்றால் சரியல்ல. என் கணவரின் சொந்த ஊர் துறையூர். அவருக்கு ஏற்கனவே திருமணம் ஆகி குழந்தைகள் உள்ளனர். நான் பொதுக்குடும்ப வருமானத்தை எடுத்து எனக்கு சட்டப்படி திருமணமாகாத

உறவுகளுக்காக செலவு செய்கிறேன் என்றால் சரியல்ல. அவருக்காக நான் பொதுக்குடும்ப சொத்துக்களை விற்று அழித்து வருகிறேன் என்றால் சரியல்ல. எனவே நான் செய்த கிரைய பத்திரங்களும் செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களில் இருந்து கிடைக்கும் வருமானத்திலிருந்து ராமகிருஷ்ணன், வெங்கடேசன், பாலமுருகனின் பிள்ளைகளுக்கு அவர்கள் கேட்கும் போது கொடுத்து வருகிறேன். எனவே தாவா சொத்துக்களில் உள்ள வருமானத்தை பகிர்ந்து தான் எடுத்துக்கொள்கிறோம் என்றால் நான் அவர்களுக்கு உதவியாக தான் செய்கிறேன். நான் தவறாக சொல்கிறேன் என்றும் அவர்களின் உரிமையின் அடிப்படையில் தான் பணம் வாங்குகிறார்கள் என்றால் சரியல்ல. என் கணவருக்கு சொத்தை அனுபவிக்க உரிமை இல்லை என்றால் சரியல்ல. நான்தாக்கல் செய்துள்ள அசல் வழக்கு எண்.30/2022 தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. நான் வாதிக்கு எதுவும் கொடுக்கவில்லை. எனக்கும் அவருக்கும் பேச்சுவார்த்தை இல்லை. மணிமேகலை சொத்து கேட்டதனால் தான் எனக்கும் அவருக்கும் பிரச்சனை என்றால் சரியல்ல. நானும் மற்ற சகோதரர்களும் சேர்ந்து வாதியை மட்டும் விட்டுவிட்டு பாகம் பிரித்துக்கொள்ளலாம் என்று தான் அசல் வழக்கு எண்.5/2014-ஐ தாக்கல் செய்தோம் என்றால் சரியல்ல. மற்ற சகோதர்களுடன் அவ்வப்போது பேசுவேன். எனவே அசல் வழக்கு எண். 2/2015 தாவாப்படி தீர்ப்பாக வேண்டும் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை**

இல்லை

Sd/-A. Balkis, B.L.,
Principal District Judge
Perambalur.